விஞ்ஞானப்பிரிவு
வகுப்புகள்
பௌதிகம்
திரு. பத்மநாதன்
A/L 86 மீட்டல் வகுப்பு
பொறியியல்
A/L 87 வெப்பவியல்
விபரங்களுக்கு:-
நொதேண் இன்ஸ்ரிரியூட்
(சென்ஜோன்ஸ் கல்லூரி
முன்பாக)
408, பிரதான வீதி,
கண்டுக்குளி.

# உதயன்

விலை ரூ-1/=

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

86 ஆகஸ்ட்
வினாவிடை வகுப்புகள்
பொருளியல்:-
திரு கிருள்ணானந்தன்
வர்த்தகம்:-
திரு. லங்காதுரை
1979 - 85 வரையிலான வினாக்கள் அச்சடித்துக் கொடுக்கப்படுகின்றது.
ஆரம்பம்: 7—4—86
விபரங்களுக்கு:—
நொதேண் இன்ஸ்ரிரியூட்
(சென்ஜோன்ஸ் கல்லூரி
முன்பாக)

கடர்:- 1 யாழ்ப்பாணம் குரோதன ஆு பங்குனி மீ 22 உ வெள்ளிக்கிழமை ஹிஜ்ரி 1406 றஜப் பிறை 23 (04 04 1986) UTHAYAN - A LIVELY TAMIL DAILY கதிர்:118

## இலங்கைத் தமிழரை சுவிஸ் அனுப்பாது

### இந்திய விருப்பத்துக்கு மாருக செய்வதில்லை என்று உறுதி

புதுடில்லி, ஏப்ரல் 3

சுவிட்சர்லாந்தில் உள்ள இலங்கைத் தமிழ் அகதிகளை இந்திய அரசின் விருப்பத்துக்கு மாருக சுவிஸ் அரசு திருப்பி அனுப்பாது

சுவிஸ் வெளிவிவகார அமைச்சர் திரு. பியர் ஔபேர இந்தியாவுக்கு மேற்கண்டவாறு உறுதி அளித்துள்ளார்.

சுவிஸ் அமைச்சர் தற்போது இந்தியாவில் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ளார்.

புதுடில்லியில் இந்திய தொழில் அமைச்சர் திரு. என். டி. திவாரியையும் வெளிவிவகார அமைச்சர் திரு பலிராம் பகத்தையும் சுவிஸ் அமைச்சர் இன்று (வியாழக்கிழமை) சந்தித்தார்.

பலிராம் பகத்துடனை சந்திப்பின்போதே சுவிஸில் உள்ள இலங்கைத் தமிழ் அகதிகள் பற்றி கலந்தாலோசிக்கப்பட்டது.

தமிழ் அகதிகளை சுவிஸ் அரசாங்கம் திருப்பி அனுப்புவதுபற்றி திரு பலிராம் பகத் சுவிஸ் அமைச்சரிடம் கவலை தெரிவித்தார்.

அதற்கு பதில் அளித்த சுவிஸ் அமைச்சர், தமிழ் அகதிகளை பெரும் அளவில் திருப்பி அனுப்பும் யோசனை எதுவும் இல்லை என்றும், இந்திய அரசின் விருப்பத்துக்கு மாருக தமிழ் அகதிகள் எவரும் திருப்பி அனுப்பப்படமாட்டார்கள் என்றும் உறுதி அளித்தார்.

முச்சந்தி முனி



புதுக்கருவி வந்தது நல்லதாய்ப் போச்சு. இல்லாட்டால் ஒக்சிஜின் சிலிண்டர் வரும் எண்டு எதிர்பார்த்துக் கொண்டிருக்க வேண்டியது தான். நோயாளியளும் சாகவேண்டியது தான்.

### பவுஸரில் இருந்த சிறுவன் காயம்

யாழ்ப்பாணம், ஏப். 4

துப்பாக்கிச்சூடு தாக்கியதில் பவுஸரில் இருந்த 13 வயதுச் சிறுவன் காயமடைந்தான்.

மாங்குளம், வவுனியா ஆஸ்பத்திரிகளில் சேர்க்கப்பட்டுத் தற்போது அநுராதபுரம் ஆஸ்பத்திரியில் அந்தச் சிறுவன் அனுமதிக்கப்பட்டுள் (4 ஆம் பக்கம் பார்க்க)

இனப்பிரச்சினை

## இந்தியாவுக்கு எவரையும் அனுப்பும் நோக்கமில்லை

### அத்துலத் கூறுகிறார்

கொழும்பு, ஏப். 4

இனப்பிரச்சினை பற்றிப் பேச இந்தியாவுக்கு இலங்கை எவரையும் அனுப்பப்போவதுஇல்லை. இப்படி தேசிய பாதுகாப்பு அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி சொன்னார்.

இந்திய வெளியுறவுச் செயலாளராகப் பதவி ஏற்ற திரு. ஏ. பி. வெங்கடேஸ்வரன் செய்தியாளரிடம் தெரிவிக்கையில்,

டில்லியில் இருந்து ஒருவர் கொழும்பு செல்வதிலும் பார்க்க, கொழும்பில் இருந்து ஒருவர் இங்கு வந்தும் பேசலாமே என்று கூறியிருந்தார்.

அதற்குப் பதிலளிக்குமாப்போல் திரு. லலித் அத்துலத் முதலி "கொழும்பில் இருந்து எவரும் டில்லி போய் பேசமாட்டார்கள்" என்று சொன்னார்.

திரு. பண்டாரியின் வருகையை இலங்கை எதிர்பார்ப்பதாகவும் அமைச்சர் அத்துலத் முதலி சொன்னார்.

இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்காக இந்தியாவின் உதவியை இன்னும் இலங்கை நாடுவதாகவும் திரு. லலித் அத்துலத் முதலி சொன்னார்.

இதனிடையில் அமைச்சரவைப் பேச்சாளரும் ராஜாங்க அமைச்சருமான டாக்டர் ஆனந்த திஸ்ஸ டி அல்விஸ் "திரு. பண்டாரி இலங்கை வருவார். ஆனால் வருகைக்கான திகதி நிர்ணயிக்கப்படவில்லை" என்று சொன்னார்.

## பலாலிப் பகுதியில் நேற்றும் தொடர்ந்து ஹெலிக்கொப்டர் சூடு!

பலாலி, ஏப். 4

குரும்பசிட்டி, மயிலிட்டி, வயாவிளான் பகுதிகளில் நேற்றும் ஹெலிக்கொப்டர் தாக்குதல் இடம்பெற்றது.

நேற்றுக் காலை 10 மணிக்கு 50க்கு மேற்பட்ட சீருடையணிந்த சிப்பாய்கள் விமானநிலையத் தென்பக்க வீதிக்குச் சமீபமாக இறங்கி கல்லுடைக்கும் தொழிலகத்துக்கு அப்பால் சென்றனர்.

அப்பகுதி மக்கள் ஏற்கனவே வீடுகளை விட்டு வெளியேறிவிட்டதனால் சிப்பாய்கள் அவ்வீடுகளுக்குள் பதுங்கி இருந்தனர்.

சிப்பாய்கள் பற்றைகள், கற்குவியல்களுக்குள்ளும் பதுங்கியிருந்தனர் என்று நேரில் கண்டு தப்பி வந்தவர்கள் தெரிவித்தனர்.

அந்நேரமே ஹெலிக்கொப்டர் தாக்குதல் நடத்தப்பட்டது. எவரையும் குறிவைக்காதுகண்டபாட்டில் தாக்குதல் நடத்தப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

இராணுவம் கிராமத்துக்குள் வரப்போவதாக வதந்தி பரவவே மக்கள் பதற்றம் அடைந்தனர்.

வயாவிளான் சந்திக் கடைகள் திறக்கப்படவில்லை சனநடமாட்டம் இன்றி அப்பகுதி காணப்பட்டது.

வயாவிளான், குரும்பசிட்டி, கட்டுவன், மயிலிட்டிக் கிராமங்கள் சன (4 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். ப. நோ. கூ. சங்க வேலை நிறுத்தம் முடிவடைந்தது

### பேச்சுவார்த்தை வெற்றி இன்று வேலைக்குத் திரும்புகின்றனர்.

நல்லூர், ஏப். 4

மூன்று கோரிக்கைகளும் ஏற்றுக் கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து, மூன்று தினங்களாக நடைபெற்ற யாழ் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கஊழியர்களின் வேலைநிறுத்தம் நேற்றுநண்பகலுடன்கைவிடப்பட்டது.

கூட்டுறவுச் சங்க நிர்வாகிகளுக்கும் கூட்டுறவு ஊழியர் தொழிற் சங்கப் பிரதிநிதிகளுக்கும் இடையில் நேற்றுச் சங்க அலுவலகத்தில் நடந்த பேச்சுக்கள் வெற்றிகரமாக முடிவடைந்தன.

சங்கத் தலைவர் பதவியை இராஜினாமாச் செய்த திரு. எஸ் வேலாயுதம்பிள்ளை, தொழிற் சங்கம் சங்கநலன்விரும்பிகள் ஆகியோரின் வேண்டுகோள்களுக்கு இணங்க ராஜினாமாவை வாபஸ் வாங்கினார்.

மீண்டும் தலைவர் பதவியை ஏற்றுக் கொண்டு பேச்சுக்களுக்குத் தலைமை வகித்தார்.

பேச்சுக்களின் போது பின்வரும் முடிவுகள் எடுக்கப்பட்டன.

1 திரு. எஸ் எஸ் மனோகரனுக்கு வேலை வழங்குவது.

அப்படி வேலை வழங்கும் போது அவருக்குக் (4- ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்நகரில் இன்று கடையடைப்பு

நல்லூர், ஏப். 4

யாழ்நகரில் இன்று கடையடைப்பு நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த இரண்டாம் திகதி ஸ்ரான்லி வீதியில் உள்ள 'விக்ரர் அன் சன்ஸ்' நிறுவனத்தில் கொள்ளை இடம்பெற்றது.

காரொன்றில் வந்த இனந்தெரியாத கோஷ்டியினர் சுமார் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான வீடியோடெக், வீடியோ கமெரா மற்றும் படக்கொப்பிகள் போன்றவற்றை அபகரித்துச் சென்றனர்.

இதனை ஆட்சேபித்தே இன்று யாழ்நகரில் கடைஅடைப்பு நடத்த ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

## உடலின் ஒரு பகுதி மரத்துப் போன நிலையில் ஒரு நோயாளி

யாழ்ப்பாணம், ஏப். 4

உடலின் ஒரு பக்கம் மரத்துப் போன நிலையில் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார் ஒரு நோயாளி.

அவருக்கு எப்படி இந்த நிலை ஏற்பட்டது என்பதை ஆராய்ச்சி செய்து கண்டுபிடிப்பதில் வைத்திய அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த புதன்கிழமை பகல் சேந்தாங்குளம் பகுதியில் நடத்தப்பட்ட ஹெலிக்கொப்டர் தாக்குதலின் போது பாதிக்கப்பட்டாராம் இந்த நபர்.

தாக்குதல் நடந்த சமயம் வீதியில் சென்று கொண்டு இருந்த வான் ஒன்றின் மீது ஹெலிக்கொப்டரில் இருந்து சுடப்பட்டது. அப்போது வான் அனாதரவாகக் கைவிடப்பட்டது.

அதன் பின்னர் அந்த வானின் மேல் ஹெலிக்கொப்டரில் இருந்து ஏதோ திராவகம் ஊற்றப்பட்டதாம். அதைத் தொடர்ந்து அந்த வான் தீப்பற்றி எரிந்தது என்று கூறப்படுகிறது.

அச்சமயம் அருகில் நின்றுகொண்டிருந்த நபர் மீது அத்திராவகம் பட்டதாம். அதன் பின்னர் தான் அவரின் உடலில் ஒரு பகுதி உணர்ச்சியற்றுப் போனதாகத் தெரிவிக்கப்படுகிறது.

### போக்குவரத்து குற்றங்கள் பிடிபடாத யாழ்நகர்!

கொழும்பு, ஏப். 4

கடந்த ஆண்டு யாழ் குடாநாட்டில் போக்குவரத்துக் குற்றங்கள் ஒன்ருவது பிடிக்கப்படவில்லை.

இப்படி கொழும்பில் பொலீஸ் உயர் அதிகாரி சொன்னார்.

1985இல் நாடு முழுவதிலும் 2 லட்சம் போக்குவரத்துக் குற்றங்களைப் பொலிஸார் பிடித்தனர். கொழும்பில் மட்டும் 50,000 க்கு அதிகமான குற்றங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

1,330 வீதி விபத்து மரணங்கள் 1985இல் நாடு முழுவதிலும் இடம்பெற்றன.

## ஒக்சிஜின் சிலிண்டர் இன்றி யாழ். ஆஸ்பத்திரியில் சத்திரசிகிச்சை

### புதிய கருவி வந்துள்ளது

யாழ்ப்பாணம், ஏப். 4

ஒக்சிஜின் சிலிண்டர்களின் உதவி இன்றி, புறச் சூழலில் பரந்துள்ள வாயுவைக் கொண்டு இயங்கும் கருவி ஒன்றைப் பயன்படுத்தி யாழ் அரசினர் ஆஸ்பத்திரியில் தற்சமயம் சத்திரசிகிச்சைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இப்புதுவிதமான கருவி சில தினங்களுக்கு முன்னர் கொழும்பில் இருந்து யாழ் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வரப்பட்டது.

புதிய கருவியின் துணை கொண்டு கடந்த புதன்கிழமை முதலாவது சத்திர சிகிச்சை யாழ் ஆஸ்பத்திரியில் மேற்கொள்ளப்பட்டது.

Field Anaesthesia Machine என்று இதற்குப் பெயர்.

யுத்த காலத்தில் இது போன்ற கருவிகளின் துணைகொண்டே, டாக்டர்கள் அவசர சத்திர சிகிச்சைகளை மேற்கொண்டு வந்தனர்.

இந்தக் கருவியின் பெறுமதி சுமார் 1 லட்சம் ரூபாவாகும்.

இக் கருவியைப் பெற்றுத் தரும்படி யாழ் ஆஸ்பத்திரி நிர்வாகிகள் ஒரு ஆண்டுக்கு முன்னரே வேண்டுகோள் விடுத்து இருந்தனர். அந்த வேண்டுகோளுக்கு இப்போது பலன் கிடைத்துள்ளது.

சப்புகஸ்கந்த எல்.பி காஸ் தொழிற்சாலையில் ஏற்பட்ட காஸ் சிலிண்டர் விபத்தின் பின்னர் யாழ் ஆஸ்பத்திரிக்கு ஒக்சிஜின் சிலிண்டர்கள் வருவது குறைந்துள்ளது.

இந்த நெருக்கடியான சமயத்தில் இப்புதிய கருவி யாழ் வந்து சேர்ந்தது ஒரு வரப்பிரசாதம் என்று கூறப்படுகிறது.

## கொக்காவில் பகுதியில் சிப்பாய்கள் சல்லடை

### சம்பவ இடத்தில் எரிந்த நிலையில் லொறி, வான், சடலங்களும் கிடக்கின்றன.

யாழ்ப்பாணம், ஏப். 4

கொக்காவில் நிலக்கண்ணி வெடித் தாக்குதலைத் தொடர்ந்து அப்பகுதிக்காடுகள் எல்லாம் நேற்று, சிப்பாய்கள் சல்லடைத் தேடுதல் நடத்தினர்.

அநுராதபுரத்தில் இருந்து வரவழைக்கப்பட்ட மேலதிகமான சிப்பாய்களும் இத்தேடுதலில் ஈடுபடுத்தப்பட்டனர்.

தேடுதலின் போது, போக்குவரத்துச் செய்த சகல வாகனங்களும் மறிக்கப்பட்டு சோதனை இடப்பட்டன.

தேடுதல் நடவடிக்கையின் போது, ஹெலிக்கொப்டர்கள் மூலம் ஆகாயப் பாதுகாப்பு வழங்கப்பட்டது.

ஓமந்தை ஆயுதப்படை முகாமில் உள்ள சிப்பாய்களும் தேடுதலில் ஈடுபட்டனர்.

வவுனியா - மன்னார் வீதியில் வேப்பங்குளம், நெடுங்குளம் பகுதிகளில் சீருடையினர் நிலைத்திப்படுத்த இருந்தும் பற்றைக்குள் பதுங்கியிருந்தும் தேடுதல் நடத்தினர்.

ஐந்து நபர்கள் தேடுதலின் போது கைது செய்யப்பட்டு விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டனர்.

கண்ணி வெடித்தாக்குதல் நடந்த இடத்தில் இரண்டு சடலங்கள் கிடக்கக் காணப்பட்டன என்று தெரிகிறது.

எரிந்த நிலையில் மூன்று லொறியும் ஒரு இ. எல். எப். வானும் அந்த இடத்தில் காணப்பட்டன என்றும் சொல்லப்படுகிறது.

### தாதிகளுக்கு ஓவர்டைம்

கொழும்பு, ஏப் 4

கட்டுப்பாடற்ற முறையில் மேலதிகநேர வேலையை தாதிகள் மேற்கொள்ளலாம் என்று சுகாதார அமைச்சு, போதனா வைத்தியசாலைகள் அமைச்சு ஆகியன அறிவித்துள்ளன.

தாதிகள் வேலைநிறுத்தத்தினால் ஏற்பட்டுள்ள பாதிப்பைத் தவிர்க்கவே கட்டுப்பாடற்ற முறையில் மேலதிகநேர வேலையை மேற்கொள்ள அமைச்சுக்கள் அனுமதி வழங்கியுள்ளன.

## ராஜீவ் மெத்தனமாக இருக்கிறார் என்று நம்பவேண்டாம்

### குமுதம் ஆசிரிய தலையங்கம்

'ஜெயவர்த்தன அவர்களே! என்ற தலைப்பில் 27-3-86 குமுதம் ஆசிரியர் தலையங்கம் எழுதி உள்ளது. அதில் 'ராஜீவ் காந்தி மெத்தனமாக இருக்கிறார் என்று நம்பிக் கொண்டிருக்க வேண்டாம்' என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

குமுதம் ஆசிரியர் தலையங்கம் பின்வருமாறு:-

இலங்கை ஜனாதிபதி ஜெயவர்த்தனவுக்குச் சில விஷயங்களைத் தெளிவுபடுத்த வேண்டியவர்களாக இருக்கிறோம்.

அவர் நீடூழி வாழ வேண்டும். அவரது ஆட்சி நிலைத்துச் செழித்து இலங்கைவாழ்மக்கள் அனைவருக்கும் நன்மை பல புரிந்து பெரும் புகழ் ஈட்ட வேண்டும் என்ற நட்புணர்வினால் தூண்டப்பட்டே பேசுகிறோம்.

உங்களிடம் சில தவருன கணிப்புக்கள் காணப்படுகின்றன. அவற்றைத் திருத்திக் கொள்வதே புத்திசாலித்தனம்.

1. தமிழர் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்க இராணுவ நடவடிக்கை ஒன்றுதான் வழி என்பது உங்கள் அடிப்படையான கருத்து. ஒன்று சொல்வோம். தீர்வு நியாயமானதாக இருந்தால்தான் ராணுவத்துக்கு வெற்றி கிடைக்கும். நீதிக்கு ஒவ்வாத ஒரு தீர்வை திரந் (4 ஆம் பக்கம் பார்க்க)

## அடகு நகையை இங்கே வழங்க பிரிகேடியர் நடவடிக்கை

கொழும்பு, ஏப் 4

வடபகுதி மக்கள் வங்கிக் கிளைகளில் இருந்து கொழும்புக்கு எடுத்து வரப்பட்ட அடகு நகைகளை வாடிக்கையாளருக்குப் பாதுகாப்பாக வழங்குவதற்கு யாழ் இராணுவ இணைப்பதிகாரி நடவடிக்கை எடுக்கவுள்ளார் என்று அறியவருகிறது.

அடகு வைத்தோர் சங்கத்துடன் இது சம்பந்தமாக ஏற்கனவே இணைப்பதிகாரி பிரிகேடியர் ரூபசிங்கா பேச்சுவார்த்தை நடத்தி இருந்தார்,

அடகு நகைகளை வடபகுதி கொண்டு சென்று வழங்குவது சம்பந்தமாக அவர் பாதுகாப்புஅமைச்சின் உயர் வட்டாரங்களுடனும் மக்கள் வங்கித் தலைமைப் பீடத்துடனும் அண்மையில் ஆலோசனை நடத்தினார் என்று அறிய வருகிறது.

நகைகளை வடக்கில் வைத்து வழங்குவதற்குச் சாதகமான ஒரு முடிவு எடுக்கப்பட்டிருப்பதாகவும் உதயனுக்குத் தெரிய வந்துள்ளது.

இணைப்பதிகாரி பிரிகேடியர் ரூபசிங்கா மீண்டும் ஒருமுறை அடகு வைத்தோர் சங்கத்துடன் பேசுவதற்கு விருப்பம் தெரிவித்திருக்கிறார்.

யாழ் அரசாங்க அதிபர் மூலமாக அதற்கான ஏற்பாட்டைச் செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டிருப்பதாகவும் அறிய வந்தது.

### வடபகுதி பரீட்சை முடிவு தாமதமாகும்

யாழ்ப்பாணம் ஏப்4

வடபகுதி ஜி.சி.ஈ.சாதாரண தர பத்திரப் பரீட்சார்த்திகளுக்கு பரீட்சை முடிவுகள் கிடைப்பது தாமதமாகும்.

பரீட்சை முடிவுகளை வடபகுதிக்கு அனுப்பி வைப்பது குறித்துப் பரீட்சை ஆணையாளர் பாதுகாப்பு அமைச்சுடன் தொடர்பு கொண்டுள்ளார்.

சுபநேரம்
04-04-1986
வெள்ளிக்கிழமை
சுபநேரம்:
6.10 முதல் 7.40 வரை ராகுகாலம்:
10.40 முதல் 12 10வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்.

இளைய தலைமுறையின் இதயம் வரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நடிகை நளினியை கவர்ந்தவர் ஷோபாவாம்

தமிழ்த் திரையுலகுக்கு 'உயிருள்ளவரை உஷா' திரைப்படத்தின் மூலம் அறிமுகமானவர் நளினி. இன்று அவர் புகழின் உச்சியில்ஏறிநிற்கிறார்.

நளினியைக் கவர்ந்த நடிகை ஷோபாவாம். அவரைப் போன்று நடிக்க வேண்டும் என்ற ஆவலும் இருந்ததாம்

அதைப் பற்றி நளினியே சொல்கிறார்:

'நான் நடிகையாவதற்கு முன்னும் பின்னும் நிறைய திரைப் படங்களைப் பார்த்திருக்கிறேன். பார்த்த படங்களில் என்னைக் கவர்ந்த படம் 'பசி'

இந்தப் படத்தில் நடித்த ஷோபாவின் நடிப்பு என்னை மிகவும் கவர்ந்தது அப்படி ஒரு பாத்திரத்தில் நடிக்கக் கிடைக்குமா என்று ஏங்கியதும் உண்டு.

'பசி' படத்தை திரையுலகுக்கு வருவதற்கு முன்பார்த்தேன் ஒன்று இரண்டு முறையல்ல, பல முறைப் பார்த்தேன்; ரசித்தேன்.

கிழிந்த ஆடையுடன் ஷோபா தனது குடும்பத்தின் வறுமையைப் போக்க அலையும் கோலம் — தன்னைக் கெடுத்தவனிடம் தன்னைத் திருமணம் செய்து கொள்ளக் கோரும் கெஞ்சல் – அந்த அற்புதமான காட்சிகள் இன்னும் என் மனத்திரையில் படமாக ஓடிக்கொண்டிருக்கின்றன.

ஷோபாவைப்போல் நானும் ஏ எஸ். பிரசாதின் 'சாதனை' படத்தில் கிழிந்த ஆடையுடன் நடித்துள்ளேன்.

பிச்சைக்காரி வேடத்தில் நடந்தபடி சில்லறைக் காசு கேட்கும் காட்சியில் நடித்துவிட்டு, அதே கோலத்துடன் வீட்டிற்குச் சென்றேன்.

அம்மா என்னைப் பார்த்துவிட்டு 'ஓ' என்றுஅழத்தொடங்கிவிட்டார். நான் நடிக்கிறேன் என்பதைக் கூட மறந்து என் அம்மா'இந்தக்கோலம் உனக்கு கனவில் கூட வரக்கூடாதடி' என்று சொல்லி அழுதார்.

அப்போது நான் ஷோபா நடித்த 'பசி'யை நினைத்துக் கொண்டேன். 'பசி' யோடு எனது ஏக்கமும் தீர்ந்தது'' என்றார்.

தினசரி சினிமா

## பிரிட்டிஷ் மந்திரி புத்திமதி

பம்பாய், ஏப்ரல். 3

இந்திய உற்பத்திப் பொருள்களை இன்னும் கூடுதலாக பிரிட்டனுக்கு அனுப்பும் வாய்ப்புக்களை மேலும் விஸ்தரிக்க முடியும்.

இவ்வாறு பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் பயணமாவதற்கு முன் பம்பாயில் வர்த்தகர்கள் மத்தியில் பேசும் போதே பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சர் சேர் ஜியப்ரி ஹோ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில்;

இந்திய வர்த்தகர்கள் பிரிட்டனுக்கு வந்து இதற்குரிய வாய்ப்புகள் பற்றி ஆராய வேண்டும்.

இந்த நோக்கத்துக்காக வரும் இந்திய வர்த்தகர்களுக்கு பிரிட்டனில் ஆதரவு நிச்சயமாக உண்டு எனவும் தெரிவித்தார்.

பஞ்சாப் ஹரியாணு விவகாரம்

# புதிய ஆணைக்குழு நியமனம்

### பாரத உள்துறை அமைச்சர் ராஜ்யசபையில் அறிவிப்பு

சண்டிகார், ஏப். 3

பஞ்சாப்பில் இந்தி மொழி பேசும் மக்கள் வாழும் பகுதிகளை ஹரியாணுவுடன் இணைப்பது தொடர்பாக ஆராயப் புதிய ஆணைக்குழு நியமிக்கப்படும்.

இவ்வாறு பாரத உள்துறை அமைச்சர் திரு. பி. வி. நரசிம்மராவ் தெரிவித்துள்ளார்.

டில்லி ராஜ்யசபைக் கூட்டத்தில் நடந்த விவாதத்தில் நரசிம்மராவ் பதிலளித்து உரையாற்றினார்.

அவர் தொடர்ந்துபேசுகையில்;

உயர்நீதிமன்ற நீதிபதி ஈ. பி. வெங்கட்ராமையா தலைமையில் இந்தக் குழு நியமிக்கப்படுகிறது.

பஞ்சாப்பின் ஒரு பகுதியை ஹரியாணுவுக்குக் கொடுப்பதுபற்றிய விடயங்களை ஆராய்ந்த நீதிபதி மத்தியூ தலைமையிலான ஆணைக்குழு இந்த விடயங்கள் தொடர்பாகப் பரிந்துரை எதனையும் வழங்கவில்லை.

பஞ்சாப் உடன்பாட்டை அமுல்படுத்தும் நடவடிக்கைகள் தீவிரமாக மேற்கொள்ளப்படும் எனத் தெரிவித்தார்.

சொல்லிலும் செயலிலும் இது உறுதி செய்யப்படும் எனவும் நரசிம்மராவ் உறுதியளித்தார்,

நீதிபதி வெங்கட்ராமையா ஆணைக்குழு அறிக்கை இன்னும் 3 மாதங்களில் கிடைத்துவிடும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

தென் ஆபிரிக்காவுக்கு எதிராக

# பொருளாதாரத் தடை உடனடியாக வேண்டும்

### உலகநாடுகளிடம் பிஷப் டுட்டு தீவிர வேண்டுகோள்

ஜோஹனஸ்பேக், ஏப். 3

தென்ஆபிரிக்க நிறவெறி ஆட்சிக்கு எதிராக உலக நாடுகள் கடுமையான பொருளாதாரத் தடைகளை விதிக்கவேண்டும்.

இவ்வாறு கறுப்பினமக்கள் விடுதலையின் தீவிர பிரசாரகரான பிஷப் டெஸ்மன் டுட்டு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தென்ஆபிரிக்கநகரான ஜோஹனஸ்பேக்கில் நடந்த பெருந்திரளான மக்கள் கூட்டமொன்றில் பிஷப் டுட்டு உரையாற்றும்போதே மேற்கண்ட வேண்டுகோளை விடுத்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றும் போது;

உலகநாடுகள் தென் ஆபிரிக்காவுக்கு எதிராக இப்படியொரு நடவடிக்கையை எடுத்தாலன்றி இந்த ஆட்சி திருந்தப் போவதில்லை என வலியுறுத்திப் பேசினார்.

இப்படியொரு வேண்டுகோளை பிஷப் டுட்டு வெளியிட்டது இதுவே முதல் தடவை எனக் கூறப்படுகிறது

### கண்டனம்

புதுடில்லி, ஏப். 3

பஞ்சாப்பில் அப்பாவி மக்கள் கொலை செய்யப்பட்டதற்கு எதிராகக் கண்டனக் கூட்டமொன்று டில்லியில் நடைபெற்றது.

### பிஜித்தீவுக்கு தமிழ்ப்பாடபுத்தகங்கள்

சென்னை, ஏப். 3

பிஜித் தீவிலுள்ள தமிழ் மாணவர்களுக்கு தமிழ் நாட்டிலிருந்து பாடப் புத்தகங்கள் அனுப்பி வைக்கப்படும்.

இந்தத் தகவலை தமிழ் நாடு கல்வி அமைச்சர் அரங்கநாயகம் வெளியிட்டுள்ளார்.

பிஜித் தீவிலுள்ள தமிழர்கள் கேட்டுக் கொண்டதற்கு இணங்கவே பாடப் புத்தகங்கள் அனுப்பி வைக்கப்படுவதாக அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

## வெளி உலகில்

# பாகிஸ்தான் ஆக்கிரமித்துள்ள ஜம்மு - காஷ்மீர் நிலப்பகுதி

### சிம்லா உடன்பாட்டு அடிப்படையில் தீர்வு வேண்டும் என்கிறார் நாராயணன்

புதுடில்லி, ஏப்ரல் 3

ஜம்மு–காஷ்மீர்ப்பகுதிகளில் ஒரு பகுதியை பாகிஸ்தான் ஆக்கிரமித்துள்ளதான பிரச்சினைக்கு சிம்லா உடன்பாட்டு அடிப்படையில் தீர்வு காணவேண்டும்.

மேற்கண்ட கொள்கை நிலைப்பாட்டை பாரதம் மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

பாரத வெளியுறவு ஸ்டேட் மந்திரி கே. ஆர். நாராயணன் லோகசபையில் இதை வலியுறுத்தியுள்ளார்.

பிரச்சினை தொடர்பாக அளிக்கப்பட்ட எழுத்து மூலமான பதிலிலேயே இந்த விடயம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

அவரது பதிலில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

சுமார் 78 ஆயிரம் சதுர கிலோ மீற்றர் பரப்பளவு இடத்தை பாகிஸ்தான் ஆக்கிரமித்துக் கொண்டுள்ளது

1963 ஆம் ஆண்டு சீன பாகிஸ்தான் உடன்பாட்டின் கீழ் சுமார் 5720 ச. கி மீற்றர் பகுதியை பாகிஸ்தான் சீனவுக்கு சட்ட விரோதமாகவழங்கிவிட்டது.

சீன சட்ட விரோதமாக பெற்றஇப்பகுதியை பாரதம் மீண்டும் பெற இருதரப்பு அடிப்படையிலான அமைதிப் பேச்சுவார்த்தை நடத்தப்பட வேண்டும். இதுவே பாரதத்தின் விருப்பமாகும்.

எல்லை விடயமாக அதிகாரிகள் மட்ட பேச்சுக்கள் நடந்து வருகின்றன.

பாரதத்துக்குச் சொந்தமான சுமார் 33ஆயிரம் ச. கி. மீற்றர் பகுதி சட்ட விரோத ஆக்கிரமிப்பில் இருக்கிறது.

# கெய்ரோ விமானம் ஏதென்ஸில் விபத்து

### மறைத்து வைககப்பட்ட குண்டு வெடித்ததால் பலர் பலி

ஏதென்ஸ், ஏப் 3

கிரேக்கத்தில் ஏதென்ஸ் விமான நிலையத்தில் இறங்க ஆயத்தமாகிய விமானம் ஒன்று விபத்துக்குள்ளாகியது. இதிலிருந்த பயணிகள் பலர் கொல்லப்பட்டனர்.

விமானத்தின் பொதிகள் வைக்குமிடத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த குண்டொன்று வெடித்தபோது இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

ஏதென்ஸ் நகருக்கு அண்மித்த வயல் வெளிகளில் சில சடலங்கள் கிடக்கக் காணப்பட்டதாக அந்த நகரப் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

விபத்துக்குள்ளான இந்த விமானம் ரோமில் இருந்து கெய்ரோ நோக்கிச் சென்றதாகவும் ஏதென்ஸில் தரித்துச் செல்வதற்கு இறங்கியதாகவும் கூறப்படுகிறது.

மீட்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

### மார்க்கோஸ் மாருட்டம்

ஹொனோலுலு, ஏப்ரல் 3

'பிலிப்பீன்ஸ் ஜனாதிபதி நானே' இவ்வாறு மார்க்கோஸ் இன்னும் கூறிக் கொண்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

திருமதி கொருசன் அக்கியூனோவின் அரசு பற்றி அவரிடம் வினவப் பட்டபோது; 'தரம் குறைந்த சர்வாதிகாரம் அது' என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## மாநிலம் - மாவட்டம் - உள்ளூர்

# தெல்லிப்பளைஆஸ்பத்திரி இரத்தவங்கி வற்றுகிறது

### உதவி வழங்குமாறு கோரிக்கை

பலாலி, ஏப்ரல். 4

தெல்லிப்பளை ஆஸ்பத்திரியில் இரத்தத் தட்டுப்பாடு ஏற்படும் ஆபத்து ஏற்பட்டுள்ளது.

ஆஸ்பத்திரியின் இரத்த வங்கி வற்றிக் கொண்டு போகும் ஆபத்துஉருவாகியுள்ளது

கடந்த சில தினங்களாக தெல்லிப்பளையைச் சுற்றியுள்ள பகுதிகளில் நடைபெறும் சம்பவங்களில் நிறையப்பேர் பாதிக்கப்படுகின்றனர்.

அவர்களுக்கு அவசரச் சிகிச்சை அளிக்க வேண்டிய இரத்தம் போதாத நிலைமை ஏற்பட்டு வருகிறது.

இந்தத் தட்டுப்பாட்டைத் தவிர்க்க பொதுத் தாபனத் தொண்டர்கள், நலன் விரும்பிகள் முன்வந்து இரத்ததானம் செய்யும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

பாடசாலைகளின் வளர்ச்சிக்கு

## நலம் விரும்பிகள் உதவவேண்டும்

யாழ்ப்பாணம், ஏப். 4

பல பாடசாலைகளில் உயர்தர வகுப்புக்களை ஆரம்பிக்கும்போது விஞ்ஞானகூடம், மனையியற் கூடம், விஞ்ஞான உபகரணம், மனையியல் உபகரணம் ஆகியவை தேவைப்படுகின்றன.

கல்வித் திணைக்களம் இவற்றை வழங்கும் நிலையில் இல்லாத காரணத்தால் பாடசாலை நலம் விரும்பிகள் உதவி வழங்க முன்வரவேண்டும்.

வண்ணார்பண்ணை இளையதம்பி வித்தியாலயத்தில் உயர்வகுப்பு ஆரம்பவிழாவில் சிறப்புரையாற்றிய கல்வி அதிகாரி திரு. கு சோமசுந்தரம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

வித்தியாலய அதிபர் திரு. கா. கணேசதாசன் வைபவத்துக்குத் தலைமை வகித்தார். இஸ்லாம் மதத்தின் ஈகைக் கோட்பாட்டுக்கு அமைய சிவலிங்கப்புளியடி எம், ஜி. எம். வர்த்தக நிறுவனத்தினர் இப்பாடசாலையின் மனையியற்கூடத்துக்குசில உபகரணங்களை அன்பளிப்புச் செய்துள்ளது பாராட்டத்தக்கது' என்றும் திரு. சோமசுந்தரம் குறிப்பிட்டார்.

### விற்பனைக்கு

7. 4. 86 மட்டுவில் அம்மன் கோயில் கடைசித் திங்கள் பொங்கல திருவிழாவில் மில்க்வைற் விளம்பர விற்பனை வாகனத்தில் ரூ. 15- க்கு மில்க்வைற் தயாரிப்புக்களை வாங்குபவர்களுக்கு அழகிய பொலித்தீன் பாக், 1986 ஆம் ஆண்டு காந்திக் கலண்டர், அறிவு நூல்கள், வீட்டுத்தோட்டத்துக்குரிய கீரை விதைகள் யாவும் இலவசமாக வழங்கப்படும். மேலுறை கள் சேகரித்து வைத்திருப்போர் எமது வாகனத்தில் கொடுத்து பெறுமதியான பரிசுகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

மில்க்வைற் யாழ்ப்பாணம்.

### வங்கி பியோன் பிணையில்

மட்டக்களப்பு, ஏப். 4

வங்கியில் போலி கொடுப்பனவுக் கட்டளை சமர்ப்பித்து பணம் பெற்றுராம் வங்கி பியோன் ஒருவர்.

இச் சம்பவம் அண்மையில் மட்டக்களப்பு பகுதி வங்கி கிளை ஒன்றில் நடந்தது.

சந்தேகநபர் கைது செய்யப்பட்டு 2 ஆயிரம் ரூபா பிணையில் விடப்பட்டுள்ளார்.

# இன்றைய உலகம் இளைஞர் கையில்

சுன்னாகம், ஏப். 4

இன்றைய உலகம் இளைஞர்களின் கையில் தங்கியுள்ளது. இளைஞர்கள் பொறுப்புணர்ச்சியுடனும் பெரியோர்கள் ஆலோசனையைப் பெற்று திட்டமிட்டு செயலாற்றினுல் தான் வெற்றிகாண முடியும்.

சட்டத்தரணி ஆர் என். சிவப்பிரகாசம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மல்லாகம் தேசிய இளைஞர் மன்றத்தின் விசேஷ கூட்டத்தில் அவர் உரையாற்றினார்.

மன்றத் தலைவர் திரு. அருள்சோதி தலைமையில் கூட்டம் நடந்தது

# தமிழினம் தேசிய விடுதலை போராட்டத்தில்

### பரிசளிப்பு விழாவில் உரை

பருத்தித்துறை, ஏப் 4

தமிழினம் இன்று தேசிய விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கின்றது. இப் போராட்டமானது கல்வி ரீதியாக, தொழில் ரீதியாக, பொருளாதார ரீதியாக, கலை கலாசார ரீதியாக, சமய ரீதியாக, அடக்கப்படுவதற்கு எதிரானதாகும்.

கீரிமலை சிவநெறிக் கழகத்தின் பண்ணிசை, நாவன்மைப் போட்டிகள் வட இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்றன.

பரிசில்களை வழங்கி உரையாற்றிய பருத்தித்துறை லயன்ஸ் கழகத்தின் முன்னாள் தலைவர் வைத்திய கலாநிதி எம். கே. முருகானந்தம் மேற்கண்டவாறு கூறினார்.

கழக இணைச்செயலாளர் திரு. எஸ். விநாயகரத்தினம் தலைமையில் விழா நடைபெற்றது.

விழாவை யாழ். கல்வித் திணைக்கள விஞ்ஞான வட்டாரக் கல்வி [illegible] பித்து வைத்தார்.

## மக்கள் முகம்

### ஜீ. எஸ். 26 மக்கள் அவை

யாழ்ப்பாணம், ஏப். 4

யாழ் நகர் ஜீ எஸ். 26 மக்கள் அவையின் அங்குரார்ப்பணக் கூட்டம் அண்மையில் யாழ் புனித மரியாள் வித்தியாலயத்தில் நடைபெற்றது.

பல்வேறு குழுக்களின் தலைவர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

சமாதானக்குழு: திரு. ஏ. அன்ரனி, விழிப்புக் குழு: திரு பி எதிர்மன்னசிங்கம், உணவு உற்பத்திக் குழு; திரு. ஜே ஏ. ரி. கிறஸ்தோபர், சுயபொருளாதாரக்குழு; திரு ஆர். இராமச்சந்திரன், தகவல் குழு: திரு. பென். ஏபிரகாம், மாதர் அமைப்புக் குழு: திருமதி றீற்ரு நீக்கிலாஸ், கல்வி ஆலோசனைக்குழு; திரு. பி. கனகசிங்கம்.

மத்திய குழுத் தலைவராக டாக்டர் சி. செபஸ்தியாம்பிள்ளை தெரிவு செய்யப்பட்டார். வேறு 3 அங்கத்தவர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

5.4.86 இல் புனித மரியாள் வித்தியாலயத்தில் மாலையில் நடைபெறும் பொதுக் கூட்டத்தில் ஏழு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுவர்.

### அச்சுவேலி ப. நோ. கூ. ச.

யாழ்ப்பாணம், ஏப். 4

அச்சுவேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் 13 ஆவது (மாதர் சங்க) கிளையின் மாதாந்தக் கூட்டம் அண்மையில் நடைபெற்றது.

புத்தூர் சோமாஸ்கந்த கல்லூரி மண்டபத்தில் நடந்த இக் கூட்டத்திற்கு கிளைப் பாதுகாவலர் திரு. குகதாஸன் தலைமை வகித்தார்.

பின்வருவோர் புதிய நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவி: திருமதி செல்வநாயகி ஜெயராம், செயலாளர்: திருமதி சரஸ்வதி வித்தியானந்தன், பொருளாளர்; திருமதி விஜயலட்சுமி பஞ்சலிங்கம், 6 பேர் கொண்ட செயற்குழுவும் தெரிவு செய்யப்பட்டது.



மானிப்பாய் இந்துக் கல்லூரியின் சிற்பி அமரர் முத்துவேற்பிள்ளை

மானிப்பாய் இந்துக் கல்லூரியின் சிற்பி அமரர் திரு. க. முத்துவேற்பிள்ளை.

அன்னாரின் ஆத்மாவோடு இரண்டறக் கலந்த கல்வி ஸ்தாபனம் 'மானிப்பாய் இந்து' ஆகும்.

இயல்பாகவே கல்வியில் விவேகம், விளையாட்டுத்துறை ஆர்வம் நிறைந்த இவரின் திறமைக்கு ரேயல் கல்லூரி மதிப்பு அளித்து பல புலமைப் பரிசில்களை அளித்தது.

தெல்லிப்பளை யூனியன் கல்லூரி ஆசிரியராகவும் பலாலி ஆசிரியர் கலாசாலை அதிபராகவும் பணி புரிந்த அன்னாரின் நிர்வாகத் திறமையைக் கண்ட மக்கள் 'மானிப்பாய் இந்து' வின் பொறுப்பை அவரிடம் ஒப்படைத்தார்கள்.

ரேயல் கல்லூரிக்குச் சமமாக மானிப்பாய் இந்துக் கல்லூரியை மாற்றி அமைத்தவர் திரு. முத்துவேற்பிள்ளை.

இலக்கியம், நாடகம் போன்ற துறைகளிலும் மாணவரை ஈடுபடுத்தி தமிழுக்கு அரும்பணி ஆற்றினார்.

வடமாகாண ஆசிரியர் சம்மேளனம், அதிபர்கள் சம்மேளனம், யாழ் உதைபந்தாட்டச் சம்மேளனம் போன்றவற்றின் தலைவராக இருந்து அவர் அளப்பரிய சேவை களைச் செய்தார்.

1972 இல் ஓய்வெடுத்த பின்வரும் மானிப்பாய் இந்துக் கல்லூரியை அவர் மறந்தார் இல்லை.

பழைய மாணவரின் துணையோடு 'மானிப்பாய் இந்து' வின் வளர்ச்சிக்கு பல அபிவிருத்தி வேலைகளை அவர் நிறைவேற்றிக் கொடுத்தார்.

மானிப்பாயின் சமய' சமூக பொருளாதார வளர்ச்சிக்கான பொது ஸ்தாபனங்களின் முக்கியஸ்தராக இருந்து சேவையாற்றியவர் அவர்.

மறைந்த முதலியார் மகேசனுடன் சேர்ந்து நவாலியூர் அநாதைகள் இல்லம் ஒன்று உருவாகக் காரணகர்த்தாவாக விளங்கியவர் திரு. முத்துவேற்பிள்ளை.

சொல்லுக்கும் செயலுக்கும் மதிப்பளித்து கடமை ஆற்றி மறைந்த அன்னாரின் ஆத்மா சாந்தி அடைவதாக! ஓம் சாந்தி.

—இரா. மகேந்திரசிங்கம்.

### சமாதான சுகாதார குழுக்கள்

காங்கேசன்துறை,வீதி அரசடி வீதி, பிறவுன் வீதி, நாவலர் வீதி,ஆகியவற்றை உள்ளடக்கிய பகுதிகளுக்கு சமாதானக் குழுக்கள், சுகாதாரக் குழுக்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

9 உறுப்பினர்களைக் கொண்ட சமாதானக் குழுவுக்கு திரு. தி. அமிர்தநாதன் தலைவராகவும் செயலாளராக திரு. தி. மகேஸ்பாலனும் தெரிவு செய்யப்பட்டனர்.

13 உறுப்பினர்களைக் கொண்ட சுகாதாரக்குழுவுக்கு தலைவராக திரு. கே. வி. துரைராஜாவும் செயலாளராக திரு. இராஜலிங்கமும் தெரிவு செய்யப்பட்டனர்.

### சிவானந்தன் மலேசியாபயணம்

மலேசியாவில் தம்பினில் உள்ள ஸ்ரீ வைத்தீஸ்வரன் கோயில் மகா கும்பாபிஷேகத்தில் கலந்து கொள்ள ஈழத்துச் சிவானந்தன் சென்றுள்ளார்.

ஆலய நிர்வாகத்தின் அழைப்பை ஏற்று மலேஷியா சென்றுள்ள அவர் தொடர் சொற்பொழிவுகள் நிகழ்த்துவார்.

'மனித வாழ்க்கையும் சைவ சித்தாந்தமும்' 'வாழ்க்கையும் வழிபாடும்' 'சோழர் காலமும் திருக்கோயில்களும்' என்ற தலைப்புக்களில் அவர் பேசுவார்.

### தம்பிராயில் சிறுவர் பாடசாலை

பூநகரி, ஏப்.4

பூநகரி தம்பிராய் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் சர்வோதயத்தின் ஆதரவில் சிறுவர் பாடசாலை ஒன்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கிளிநொச்சி பகுதி உதவி அமைப்பாளர் திரு விஜயகுமார் பாடசாலையை ஆரம்பித்து வைத்தார்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### உதய சங்கற்பம்

எத்தனை வந்தாலும் அவை போதா என்று உயர உயரத் துள்ளிக் கொண்டே இருக்கிறோம். இதனுல் நாம் புதுப் புது அதிருப்திகளையும் குறைகளையும் தான் உண்டாக்கிக் கொள்கிறோம். துள்ளாமல் அடங்கிக் கிடந்தால் தான் இறைவனுடைய திருவருள் கிடைக்கும்.

-காஞ்சி முனிவர்

உதயன்

உண்மை - அறம் - நடுநிலைமை

இல: 15, 2வது ஒழுங்கை, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 24805 22 073 04 04 86 த.பெ. 28

## இன்றைய சூழ்நிலையில் சாரணர்களின் பணி

சிவில் நிர்வாகம் இல்லாத இக்காலகட்டத்தில் யாழ். மாவட்டம் முழுவதும் சாரணர் இயக்கம் செயற்பட வேண்டும்—

வடமாநில கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் கருத்தரங்கு ஒன்றில் இப்படித் தெரிவித்தார்.

கல்விப் பணிப்பாளரின் கருத்து சரியான நேரத்தில் தெரிவிக்கப்பட்டதொன்றுகும்.

தொடர்ச்சியாக நடைபெற்ற சம்பவங்கள் காரணமாக வடக்கில் சிவில் நிர்வாகம் தற்போது ஸ்தம்பிதம் அடைந்துள்ளது. அரசாங்கமே இதனை ஒப்புக் கொண்டு விட்டது.

உள்ளூராட்சி மன்றங்கள், பொலிஸ் நிர்வாகம் ஆகியவை இன்று செயலிழந்து போனதால் தமிழ் மக்களுக்கு வழிகாட்ட வேண்டிய பெரும் பொறுப்பு யாரிடம் என்ற கேள்வி எழுந்துள்ளது.

சுமார் பத்து ஆண்டுகளுக்கு முன்னர் — அதாவது வடக்கில் நெருக்கடி உக்கிரமடைவதற்கு முன்னர் யாழ் மாவட்டத்தில் உள்ள பெரும்பாலான பாடசாலைகளில் சாரணர் இயக்கம் சிறந்த முறையில் இயங்கி வந்தது.

சாரணர் பாசறைகள் அடிக்கடி நடத்தப்பட்டு வந்தன. சகல வழிகளிலும் சாரணர் இயக்கத்துக்கு புத்துணர்ச்சி அளிக்கப்பட்டு வந்தது சமூகத் தொண்டிலும் சாரணர்கள் ஈடுபட்டு வந்தனர்.

எனினும் தற்போதைய நிலைமை காரணமாக பல பாடசாலைகளில் இன்று சாரணர் இயக்கங்கள் செயல் இழந்த போதிலும் இன்றைய சூழ்நிலையில் சாரணர்களின் உதவி மிகவும் அவசியமாகிறது.

அன்றுட வாழ்க்கையில் நாம் இதனை உணரக்கூடியதாக இருக்கிறது

சாரணர்கள் இன்று வீதிப் போக்குவரத்துகளில் உதவலாம். பொதுமக்களுக்கு முதலுதவி சிகிச்சை பற்றிய ஆலோசனைகளைத் தெரிவிக்கலாம். சிகிச்சையும் அளிக்கலாம்.

இது போன்ற எத்தனையோ கருமங்களில் பொதுமக்களுக்கு உதவ முடியும்.

இன்று யாழ் மாவட்டம் எதிர் நோக்கும் முக்கிய பிரச்சினைகளில் வீதிப் போக்குவரத்தும் ஒன்றுகும்.

வீதி என்ற ஞாபகம் இல்லாமலேயே வீதியால் நடக்கும் மக்களை நாம் யாழ் நகரில் காணக்கூடியதாக இருக்கிறது. வாகனங்களும் அப்படியே.

வீதிப் போக்குவரத்து ஒழுங்குகள் முற்றுகச் சீர்குலைந்துள்ளன. நகரில் முக்கிய சில பகுதிகளில் ஒரு சாரார் வீதிப்போக்குவரத்து ஒழுங்குகளை நடைமுறைப்படுத்தினுலும் யாழ் மாவட்டத்தின் பெரும்பாலான பகுதிகளில் போக்குவரத்து ஒழுங்குகள் கிடையா.

சாரணர்கள் இத்துறையில் பெரும் அளவு உதவமுடியும். பாதசாரிகளுக்குத் தேவையான ஆலோசனைகளையும் அவர்கள் வழங்க முடியும்.

இன்றைய சூழ்நிலையில் பொது மக்களுக்கு எந்நேரமும் தேவையானது முதலுதவிச் சிகிச்சை. இத்துறையிலும் சாரணர் முன் வந்து உதவலாம்.

சாரணர் இயக்கங்கள் மீண்டும் முழு அளவில் இயங்குவதன் மூலம் சாரணர் தந்தை பேடன் பவலின் இலட்சியத்தை ஒவ்வொரு சாரணரும் நிறைவேற்ற முடியும்.

## சிறுகச் சிறுக சேர்த்து கல்விக் கூடங்களை அபிவிருத்தி செய்ய வேண்டும்

### கல்விப் பணிப்பாளர் கூறுகிறுர்

யாழ்ப்பாணம், ஏப் 4

நம் முன்னேர் பிடி அரிசி சேர்த்து ஆலயங்களை அமைத்தார்கள். நாம் சிறுகச் சிறுக சேர்த்து கல்விக் கூடங்களை அபிவிருத்தி செய்ய வேண்டும்.

இப்படி யாழ் மாவட்டக் கல்விப் பணிப்பாளர் திரு இ. சுந்தரலிங்கம் சொன்னுர்.

யாழ்— கொட்டடி நமசிவாய வித்தியாலயத்தில் 18 ஆண்டுகளாக பணிபுரிந்து 57 ஆவது வயதில் ஓய்வு பெறும் உப அதிபர் திரு.க. செல்லத்துரையின் சேவை நலன் பாராட்டு விழா அண்மையில் நடைபெற்றது.

அதில் கலந்து கொண்டு பேசுகையிலேயே பணிப்பாளர் மேற்கண்டவாறு சொன்னுர்.

வித்தியாலய நலன் புரிச் சங்கத் தலைவர் திரு. ஆ. பொ. குலசிங்கம் தலைமை வகித்தார்.

இன்றுள்ள இக்கட்டான நிலையில் கல்விச் செல்வத்தை அள்ளி வழங்கும் நல்லாசிரியர்கள் ஓய்வு பெறுவது பேரிழப்பாகும் என்றும் கல்விப் பணிப்பாளர் சொன்னுர்.

சிறப்பு விருந்தினராக யாழ் வட்டாரக் கல்வி அதிகாரி திரு இ. சிவானந்தன், தமிழர் ஆசிரியர் சங்க வடமாகாணச் செயலாளர் திரு. வி. சி சிவபாலசிங்கம் ஆகியோரும் உரையாற்றினர்.

ஓய்வு பெறும் உப அதிபர் திரு. செல்லத்துரை பேசுகையில்;

தொழில் எதுவாக இருப்பினும் மனவிருப்பு அத்தொழிலின் மீது அலாதியாக இருக்குமேயாயின் நிச்சயம் அத்தொழில் நமக்கு முன்னேற்றத்தையும் மனநிறைவையும் கொடுக்கும் என்பது எனது அனுபவ உண்மை என்று சொன்னுர்.

# காமனை மறந்து இராமனுக்குச் சேவை

## அனுமானின் நன்னெறி

காஞ்சிப் பெரிய சுவாமிகளுடைய சொற்பொழிவினைத் தழுவி எழுதப்பெற்றது.

ஆஞ்சநேய சுவாமியினுடைய சிறப்பே தனித்துவமானது. அவர் பக்தர்களுக்கு வழங்கும் அருட் குணங்களை நோக்குமிடத்து அவரிடமுள்ள சிறப்பு என்னவென்பது தெளிவாகும்.

புத்தி, பலம், புகழ், உறுதிப்பாடு, அஞ்சா நெஞ்சம், உடற்சுகம், விழிப்பு, வாக்குவன்மை ஆகிய இத்தனையையும் அவரை நினைக்கும் அடியார்களுக்கு அவர் வழங்குகின்றுர்.

இத்தனை அருட்சிறப்புக்களும் சாதாரணமாக ஓர் இடத்திலே வந்து அமைவதில்லை.

நல்ல புத்தியுடையவன் தேக சுகமின்றி இளைத்தவனுக இருப்பான். பெரிய பலசாலி புத்தியற்றவனுக இருப்பான். புத்தியும் தேகசுகமும் உடையவன் கோழையாக, பயந்த சுபாவமுடையவனுக இருப்பான்; எத்தனை திறமைகள் இருந்தாலும் அவற்றை பிரயோகிக்கிற சுறுசுறுப்போ விழிப்போ இல்லாமல் சோம்பேறியாக இருப்பான்; பெரிய அறிவாளியாக இருந்தாலும் தனக்குத் தெரிந்தவற்றைப் பிறர்க்கு எடுத்துச் சொல்லும் வாக்கு வன்மை இல்லாமல் இருப்பான். இம்மாதிரி ஏற்றத் தாழ்வான குணங்கள் இல்லாமல் எல்லா உயர் குணங்களையும் ஒரே இடத்திலே பொழிகிறுர் ஆஞ்சநேயர்.

இவ்வாறு பொழிவதற்குக் காரணம்,சாதாரணமாக ஒரே இடத்திலே சேர்ந்திருக்கக் காணமுடியாத அத்தனை குணங்களும் சக்திகளும் அவர் ஒருவரிடமே பூரணமாக ஒன்று சேர்ந்திருப்பதேயாகும்.

எதிரெதிர் குணங்கள் எனக் கருதப்படுவனகூட அவரிடத்தே ஒன்று சேர்ந்து அமைதி பெறுகின்றன.

உதாரணமாக பலசாலியிடம் பணிவு இருக்காது பெரிய புத்திசாலிக்கு அகங்காரமில்லாத பக்தி இராது தேகபலத்தையும் புத்திபலத்தையும் கொண்டுள்ள ஆஞ்சநேயரோ பக்தி, பணிவு ஆகியவற்றிலும் முதன்மையாக நிற்கிறுர்.

மகா சக்திமானுக இருந்தும், அத்தனை சக்தியும் "ராமன் போட்ட பிச்சை" என்ற அடக்கத்தோடு, தனக்கு ஒரு பதவியுங் கேளாமல் இராமதாசனுகவே இருந்தார். அப்படி அடிமையாக இருந்ததாலேயே அவர் நிறைந்து இருந்தார்.

பக்தி உள்ளவர்களுக்குக்கூட அப்பக்த ஞானத்தின் தெளிவு இல்லாமல் மூடப்பக்தியாகவோ முரட்டு பக்தியாகவோ இருப்பதுண்டு. ஞானமும் பக்தியும் வேறு வேறு என்றே அவர்கள் சண்டை போட்டுக் கொள்வார்கள்.

ஆஞ்சநேயரோ இராமச்சந்திர மூர்த்தியின் பரமபக்தராக இருக்கும் போதே பரம ஞானியாகவும் இருந்தார். தக்ஷிணு மூர்த்தி எப்படி ஸநகாதி முனிவர்களை முன்னிட்டு உபதேசம் செய்கிறுரோ அப்படியே ஸ்ரீராமனும் ஆஞ்சநேய சுவாமியை முன்னுல் வைத்துக் கொண்டே ஞானோபதேசம் செய்கிறுர் என்று 'வைதேகி ஸஹிதம்' என்னும் சுலோகம் கூறுகின்றது.

அர்ச்சுனனுடைய தேர்க்கொடியிலே இருந்து கொண்டு கீதோபதேசத்தை நேரிலேயே கேட்டவர் அவர்.பைசாச மொழியிலே கீதைக்குத் தத்துவமயமான ஒரு விளக்கவுரை இருப்பதாகவும், அது ஆஞ்சநேயராலே இயற்றப்பட்டதென்றும் கூறுவார்கள்.

ஒன்பது இலக்கணங்களும் (வியாகரணம்) தெரிந்த 'நவ வ்யாகரண வேத்தா' என்று இராமரே புகழ்கின்ற அளவுக்கு அவர் ஒரு பெரிய கல்விமான். எனினும் அவர் தன்னுடைய புத்தி ஒளியினையும் சக்தி வேகத்தினையும் அடக்கிக் கொண்டு, பக்தியிலேயே பரமானந்தம் அநுபவித்தார்.

பக்தி என்பதால் உலக காரியங்களைக் கவனியாது விட்டார் என்று கூறமுடியாது. மகா பௌருஷத்தோடு போராடி அபலைகளைக் காப்பாற்றியவர்களில் அவருக்கு எவருமே இணை இல்லை. உலக சேவைக்கு அவரே உதாரணம்.

ஞானத்தில் உச்சநிலை; பக்தியில் உச்சநிலை; வீரத்தில் உச்சநிலை: கீர்த்தியில் உச்சநிலை; சேவையில் உச்சநிலை; பணிவில் உச்சநிலை. இப்படி எல்லாம் ஒன்று சேர்ந்திருக்கின்ற சுயவடிவம் ஒன்று உண்டு என்றுல், அது ஆஞ்சநேய சுவாமிதான்.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக அவருடைய பிரம்மச்சரியம் பற்றிக் கூறவேண்டும் ஒரு கணமேனும் காமம் என்கிற நினைப்பே வராத மகா பரிசுத்த மூர்த்தி அவர். தனக்கென்று எதுவுமே நினைக்காதவர். ஒரு காமனையும் இல்லாமல் இராமனுக்குச் சேவை செய்தே நிறைந்து விட்டார்.

அவரை நம்முடைய நாட்டில் பொதுவாக 'அநுமார்' என்போம். கன்னட தேசத்தில் அவர் 'ஹநுமந்தையா' எனப்படுவர். சித்தூருக்கு வடக்கே ஆந்திரா முழுவதும் 'ஆஞ்சநேயலு' என்பார்கள். மகாராஷ்டிரம் முழுக்க 'மாருதி மாருதி' என்று கொண்டாடுவார்கள். அதற்கும் வடக்குப் பக்கத்தில் வாழ்பவர்கள் 'மஹாவீர்' என்றே சொல்வார்கள்.



'ராம் ராம்' எங்கெங்கே உச்சரித்துக் கொண்டிருந்தாலும், இரகுநாத கீர்த்தனம் எங்கே நடந்தாலும் அங்கெல்லாம் நம் கண்ணுக்குத் தெரியாமல் ஆஞ்சநேயர் தாரை தாரையாக ஆனந்தக் கண்ணீர் சொரிய நின்று கேட்டுக் கொண்டிருப்பார்

ஞானக்கதிர்

இக்காலத்தில், எமக்கு ஏனைய அருட் குணங்களுடன் அடக்கமாய் இருக்கின்ற பண்பு மிக அவசியமாகத் தேவைப் படுகின்றது. எத்தனை வந்தாலும் இவை போதா என்று உயர உயரத் துள்ளிக் கொண்டேயிருக்கிறும். இதனுல் நாம் புதுப்புது அதிருப்திகளையும் குறைகளையுந்தான் உண்டாக்கிக் கொள்கிறும் துள்ளாமல் அடங்கிக் கிடந்தால் தான் இறைவனுடைய திருவருள் கிடைக்கும். அதுதான் நிறைந்த நிறைவு. அதை நமக்கு ஆஞ்சநேயர் திருவருள் பாலிக்க வேண்டும்.

## கிராமிய வங்கியின் முக்கியத்துவம் குறித்து வங்கி முகாமையாளர்

சுன்னுகம், ஏப், 4

வடக்கிலும் கிழக்கிலும் பணப் புழக்கம் ஸ்தம்பிதமடைந்து விட்டதனுல் இன்று தமிழ் மக்களுக்கு பாதுகாப்பான ஒரே ஸ்தாபனம் கிராமிய வங்கியேதான்.

வடபிரதேச மக்கள் வங்கி முகாமையாளர் திரு. மு. கணேசசுந்தரம் சுன்னுகத்தில் புதிய கிராமிய வங்கியைத் திறந்து வைத்துப் பேசுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சுன்னுகத்தில் பல நோக்குக்கூட்டுறவுச்சங்க தலைமைக் கட்டடத்தில் [illegible] குமாரவேல் தலைமையில் [illegible]

## மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் 19 ஆயுதபடை முகாம்கள்

மட்டக்களப்பு, ஏப் 4

மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களில் பொலிஸ் நிலையங்களுக்குப் புறம்பாக 19 ஆயுதப்படை முகாம்கள் தற்போது இயங்கிவருகின்றன

மட்டக்களப்பு மாவட்டத்தில் கல்லடி, வாழைச்சேனை, புனுணை, மாங்கேணி, சந்திவெளி, கிரான், புல்லுமலை, ஏறுவூர், கரடியனுறு, களுவாஞ்சிக்குடி-கிழக்கு பிராந்திய பொலிஸ்மா அதிபர் அலுவலகம், விமானப்படைத் தளம் ஆகிய இடங்களிலும்—

அம்பாறை மாவட்டத்தில் கோமாரி, திருக்கோவில், மல்வத்தை, கல்முனை, அக்கரைப்பற்று, அம்பாறை, சவளக்கடை ஆகிய இடங்களிலும் ஆயுதப்படை முகாம்கள் உள்ளன.

## பல குடும்பங்கள் இடம் பெயர்வு

சாவகச்சேரி, ஏப். 4

பருத்தித்துறைப் பகுதியில் ஏற்பட்டு வரும் பதற்ற நிலை காரணமாக குடிபெயர்ந்த பல குடும்பங்கள் கல்வயல், வரணி, மட்டுவில், நுணுவில் ஆகிய பகுதிகளுக்கு வந்து சேர்ந்துள்ளன.

இவர்களில் பலர் கால் நடையாகவே வந்து சேர்ந்தனர்.

வீட்டுப் பொருள்கள் அத்தனையையும் இழந்த நிலையிலேயே புறப்பட்டு வந்ததாக இவர்கள் தெரிவித்தனர்.

# ஆசிரியர்லீவு ஒருசலுகை; உரிமை அல்ல

### கல்விப் பணிப்பாளர் கூறுகிறுர்

பலாலி, ஏப். 4

ஆசிரியர்களுக்கு லீவு மிகவும் அவசியம் தான். ஆனுலும் லீவு இருக்கின்றது என்பதற்காக லீவை எடுக்கக்கூடாது லீவு ஒரு சலுகையேதவிர — உரிமையல்ல என்பதனை ஆசிரியர்கள் அனைவரும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

லீவு எடுக்காத ஆசிரியர்களுக்கு அவர்களை ஊக்குவிக்கவென நற்சான்றிதழ்களை வழங்கவும் — ஊக்குவிப்புப் பணம் வழங்கவும் நாம் திட்டங்களைத் தீட்டியுள்ளோம்.

இதன் அடிப்படையில் வைத்தே பதவியுயர்வுகள் கூடவழங்க நாம் நடவடிக்கை எடுப்போம்.

காங்கேசன்துறைக் கல்வி வட்டார அதிபர்களின் கூட்டத்தில் யாழ்; கல்விப்பணிப்பாளர் திரு. இரா.சுந்தரலிங்கம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எனது ஆசிரியசேவைக் காலத்தில் நடைபெற்ற சம்பவங்கள் இன்றும் எனது நினைவில் வேதனை தருகின்றன,

அரைநாள் லீவுமட்டும் உள்ளதென்பதற்காக ஒரு ஆசிரியை சாப்பாட்டைக் கட்டிக் கொண்டு பாடசாலைக்கு வந்து அரைநாள் லீவை எடுத்துச் சென்ற சம்பவம் ஒன்று நடந்தது.

உண்மையில் இதைவிட மாணவர்களுக்குச் செய்யும் துரோகம் வேறென்னவுண்டு?

இப்படி அவர் கேட்டார்.



### பொய்யாமொழி

குறள்

சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல் அமைந்தொருபால்
கோடாமை சான்றேர்க் கணி.

பொருள்:

முன்னே தான் சமமாக இருந்து, பின்பு பொருளைச் சீர் தூக்கும் துலாக்கோல்போல் அமைந்து, ஒரு பக்கமாகச் சாயாமல் நடுவு நிலைமை போற்றுவது சான்றேர்க்கு அழகாகும்

# முஸ்லிம்கள் பேருவளைக்கோ தமிழர் யாழ்ப்பாணத்துக்கோ ஓடவேண்டிய அவசியம் இல்லை

### ஒற்றுமைக் கூட்டத்தில் வணசிங்க

மட்டக்களப்பு, ஏப். 4

மட்டக்களப்பு மாவட்டத்தில் வாழும் முஸ்லிம்கள் பேருவளைக்கோ தமிழர் யாழ்ப்பாணத்துக்கோ ஓடவேண்டிய அவசியம் இல்லை. இத்தகையநிலை ஒருபோதும் ஏற்படமாட்டாது.

மட்டக்களப்பு உதவி அரச அதிபர் அலுவலகத்தில் நடைபெற்றசமாதான கூட்டமொன்றில் உரையாற்றிய மாவட்ட தொழிற்சங்க கூட்டு சம்மேளன அமைப்பாளர் திரு. டி. எஸ். கே. வணசிங்க மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

காத்தான்குடி, ஆரையம்பதி பதற்றப் தொடர்பாக இக்கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது.

1985 ஏப்ரல் கலவரத்தின் பின்பு முஸ்லிம்கள் இப்பகுதியில் சுதந்திரமாக நடமாட முடியாத நிலை,தொழில்செய்ய முடியாத நிலை. முஸ்லிம்கள் நிம்மதியில்லாத வாழ்க்கை வாழ்கிறுர்களென முஸ்லிம் பிரமுகர்கள் பலரும் இக்கூட்டத்தில் பிரஸ்தாபித்தனர்.

திரு. வணசிங்க உரையாற்றுகையில் மேலும் கூறியதாவது:-

இம்மாவட்டத்தில் தமிழரும் முஸ்லிம்களும்வாழ வேண்டியவர்கள். முஸ்லிம்கள் பேருவளைக்கோ அல்லது தமிழர்கள் யாழ்ப்பாணத்திற்கோ ஓடவேண்டிய அவசியம் இல்லை.

இத்தகைய நிலை ஒருபோதும் ஏற்படமாட்டாது. காரணம் நாம் வெற்றிபெறுவோம். அச் [illegible] வரத்தான் போகின்றது. [illegible]ளுக்கு எந்தவொரு தீங்கும் எதிர்காலத்தில் ஏற்படமாட்டாது. எவராவது தீங்கு ஏற்படுத்தினுல் தண்டனை பெறுவார்கள்.

தீவிரவாத இயக்கமொன்று இதனைத் தனது பிரசுரத்தின் மூலம் அறிவித்துள்ளது.

அப்பிரசுரம் தமிழ்மக்களின் கொதிப்பு உணர்வினுல் வெளியாகியிருக்கலாமென நினைக்கிறேன்.

இப்படி அவர் கூறினுர்.

பிரஜைகள்குழுச் செயலாளர் சட்டத்தரணி சாம் தம்பிமுத்து தனது உரையில்:

நீதிகேட்போர் இன்னுமொருவரின் நீதியை மறுக்கக்கூடாது.

அரசாங்கம் தமிழர்களைப் பயங்கரவாதிகளாகக்கருதுவதால்தான் இதுவரை இந்நாட்டில் சமாதானம் இல்லை!

அதுபோல் இம்மாவட்டத்தில் முஸ்லிம்களைதமிழர்கள் எளவாளிகளாகக் கருதுவதால் எப்படி சமாதானம் பெறமுடியுப?

இன்றைய கூட்டத்தில் கலந்துகொண்ட முஸ்லிம்கள் தங்கள் உள்ளக் குமுறலை வெளிக்காட்டினுர்கள்.

பிரஜைகளைப் பொறுத்தவரை முஸ்லிம்களுக்கு எவ்வித தீங்கும் ஏற்பட இடமளிக்கமாட்டாது.

முஸ்லிம் சமூகம் விரைவில் 1985 ஏப்ரல் கலவரத்திற்கு முன்பு இருந்த நிலைக்கு வரப்போகின்றது. இந்நிலை வரும்போது இன்று பாதுகாப்பு வழங்கும் ஊர்காவல் படையினரை நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாபஸ் பெறச் செய்ய வேண்டும் என்றுர்.

கிழக்கிலங்கை முஸ்லிம் மஜ்லிஸ் செயலாளர் நாயகம் அல்ஹாஜ் ஏ. அகமத் லெப்பை தனது உரையில்,

தமிழ்மக்களின் நியாயமான கோரிக்கைக்கு நாம் ஒருபோதும் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை.

உங்கள் போராட்டத்துக்காக முஸ்லிம்கள் பலியாகக்கூடாது என்பதை வலியுறுத்துகின்றேும்.

உங்கள் சுதந்திரத்திற்காகப் போராடும் நீங்கள் எங்களை உங்கள் மத்தியில் சுதந்திரமாக வாழ விடுங்கள் என்றுர்.

மட்டக்களப்பு இரண்டாவது எம் பி. ஜனுப் ரிஸ்வி சின்னலெப்பை, காத்தான்குடி ப. நோ. கூ. ச. தலைவர் ஜனுப் ஏ. எல். ஜவாத் உட்பட தமிழ்-முஸ்லிம் பிரமுகர்கள் பலர் இரு சமூக ஒற்றுமையையும்வலியுறுத்தி உரையாற்றினுர்கள்.

## எதிர்கால வளத்துக்கு ஆங்கிலம் அவசியம்

### ஆங்கிலதின போட்டியில் உரை

உருத்திரபுரம், ஏப். 4

உலக மொழியான ஆங்கிலத்தை மாணவர்கள் இளமையிலேயே திறமையாகக் கற்று தமது எதிர்காலத்தை சிறப்பாக அமைத்துக் கொள்ள வேண்டும்.

தொக்குவில் கிழக்கு நாமகள் வித்தியாசாலையில் ஆங்கிலதினப்போட்டி அண்மையில் நடைபெற்றது.

அதில் கலந்து கொண்டு உரையாற்றிய மேற்படி பாடசாலையின் ஆங்கிலப் பகுதி ஆசிரியை திருமதி. யோகராணி இராமநாதன் மேற்கண்டவாறு கூறினுர்.

போட்டி நாமகள் வித்தியாசாலையில் அதன் அதிபர் ஐ. சரவணபவன் தலைமையில் நடைபெற்றது.

ஆங்கில ஆசிரியை திருமதி. சத்தியபாமா தவாளனும் உரையாற்றினுர்.

### சமய சந்நிதிகளில்

#### மகாமாரி அம்மன் புதிய இரதம்

ஊர்காவற்றுறை,ஏப்,4

புளியங்கூடல் மகா மாரி அம்மன் தேவஸ்தானத்துக்கான சிறிய இரதம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.

திருவிழாக் காலங்களிலும், விசேஷ உற்சவக் காலங்களிலும் இத்தேரிலேறி உள்வீதிவழியாக அம்பாள் உலாவருவாள்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

O/L Day Class
பாடத்திட்டத்தை ஒழுங்காகப் பூர்த்தி செய்யவும் மாணவருக்கு அதிக பயிற்சி அளிக்கும் நோக்குடனும் இம்முறை முன் கூட்டியே ஆரம்பிக்கின்றோம்.
ஆரம்பம்:- 9–4–1986
Radiant Institute
Ariyalai

உதயன்

04 04. 1986 வெள்ளிக்கிழமை

O/L Day Class
யாழ் மாவட்ட அதிசிறந்த ஆசிரியர்கள்
திரு. எஸ். சிவமோகன்
திரு. இ. செல்வவடிவேல்
திரு. K. S. மூத்துலிங்கம்
திரு. செல்வி. பீரா
திரு. பண்டிதர் துரைராஜா
திரு. குமின்ரஸ் பெடிமு
Radiant Institute
Ariyalai

கடந்த ஆண்டு

# அரிசி இறக்குமதிக்கு ரூ. 70 கோடி

## நாடு செத்துக்கொண்டிருக்கிறது

### என்கிறார் நிதி அமைச்சர்

கொழும்பு, ஏப். 4 கடந்த ஆண்டு அரிசி இறக்குமதிக்காக 70 கோடி ரூபா செலவிடப்பட்டது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இருந்து அரிசியைப் பெறமுடியாததே இதற்குக் காரணம்.

வெங்காயம், மிளகாய் ஏன் மீனைக் கூட நாம் இறக்குமதி செய்ய வேண்டியே உள்ளோம். நாடு மெதுவாக ஆனால், நிச்சயமாக செத்துக் கொண்டு இருக்கிறது.

இப்படி நிதி அமைச்சர் திரு. ரோனி டி மெல் கண்டியில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசுகையில் சொன்னார்.

நிதி அமைச்சர் மேலும் சொன்னதாவது; 1986 ஆம் ஆண்டில் பாதுகாப்புக்காக 900 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

1978 இல் ஒதுக்கப்பட்டதிலும் பார்க்க 16 மடங்கு அதிகமாக பாதுகாப்புக்குத் தற்போது செலவிடப்படுகிறது.

வடக்கு, கிழக்கில் நிலவும் பதற்ற நிலைமை காரணமாக அரிசி, மிளகாய், வெங்காயம், மீன் எல்லாமே இறக்குமதி செய்யும் நிலைவந்துவிட்டது.

எமது பொருளாதாரத்துக்கு ஏற்படும் நஷ்டம் பற்றி பொதுமக்களுக்கு ஒன்றுமே தெரியாது.

இந்த அழிவுகள் எப்போததான் நிற்கும்?

சட்டதிட்டங்கள், அரசமைப்புச் சட்டங்கள் எல்லாவற்றையும் மறந்துவிட்டு அரசியல் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றைக்காண வேண்டும், அதற்கேற்ற காலம்தான் இது

விவாதத்தில் புள்ளிகள் கூடப்பெற்ற வெல்லும் காலம் அல்ல இது. ஒவ்வொரு விஷயத்திலும் நுணுக்கப் பார்க்கும் காலமும் இது அல்ல.

நாடு எரியும்போது முட்டாள்கள்தான் அப்படிச் செயல்படுவார்கள்.

காலம் பிந்துவதற்கு முன்னர் இந்தியாவின் உதவியுடன் அரசியல் தீர்வு ஒன்றைக்காண இலங்கை அரசுக்கு மகாசங்கம் கட்டாயம் உதவ வேண்டும்—

இப்படி நிதி அமைச்சர் சொன்னார்.

## பிக்கு உட்பட மூவர் மீதான வழக்கு மே 14 இல்

கொழும்பு, ஏப். 4 அரசுக்கு எதிராக உணர்ச்சியைத் தூண்டிவிடும் துண்டுப் பிரசுரங்களை வைத்து இருந்ததாக பிக்கு உட்பட மூன்று பேர் மீது தொடரப்பட்ட வழக்கு விசாரணை மே 14 ஆம் திகதி ஆரம்பமாகும்.

கொழும்பு மேலதிக நீதிவான் திரு. டி. எஸ். ஏ விஜேசூரியா முன்னிலையில் இவ்வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

5,000 ரூபா பிணையில் இருக்கும் வண டூடாவ விமலதர்மதேரர், வத்தளை சுதந்திரக் கட்சி அமைப்பாளர் திரு. ஆர். டி. அபயசேகரா, சுதந்திரக் கட்சி உறுப்பினர் டபிள்யு. அபயக்கூன் சமுகமளித்து இருந்தனர்.

## யாழ் . . .

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

கிடைக்க வேண்டிய கொடுப்பனவுகளைவிட்டுக் கொடுப்பதற்கு தொழிற் சங்கம் உறுதி அளித்தது.

2. 1. 1. 86 தொடக்கம் 102 ரூபா வழங்கப்படும் 1 4. 86 தொடக்கம் 56 ரூபா வழங்க சிபார்சு செய்யப்படும் — இப்படி சங்கத் தலைவர் உறுதி அளித்தார்.

3. வேலைநிறுத்தத்தில் பங்கு பற்றியதற்காக ஊழியர் பழிவாங்கப்படமாட்டார்கள்.

இம்முடிவுகள் இருபகுதியினராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

இன்று (4-4 86) நடைபெறும் இயக்குநர் சபைக் கூட்டத்தில் இம்முடிவுகள் சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரம் பெறப்படும் என்று பேச்சுக்களின் முடிவில் அறிவிக்கப்பட்டது

## பவுஸரில் . .

(1ம் பக்கத் தொடர்ச்சி)

னான்.

இது பற்றி அறியப்படுவதாவது;

கிளிநொச்சியில் இருந்து அனுராதபுரம் நோக்கி பவுஸர் ஒன்று சென்று கொண்டிருந்தது.

எரிபொருள் எடுப்பதற்காகச் சென்று கொண்டு இருந்த அந்த பவுஸரை ஓமந்தைக்கு அருகில் வைத்து ஆயுதப்படையினர் மறித்தனர்.

பயத்தின் காரணமாக சாரதி பவுஸரை மறித்த இடத்தில் நிற்பாட்டாது சிறிது தூரம் தள்ளி நிறுத்தினார்.

அதனிடையில் ஆயுதப் படையினர் சுட்டுவிட்டனர்.

பவுஸரின் முன் ஆசனத்தில் இருந்த கோவிந்தன் என்ற 13 வயதுச் சிறுவன் இச்சம்பவத்தில் காயமடைந்தான்.

## பலாலிப் . . .

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நடமாட்டமற்று காணப்பட்டன.

விமானங்கள் இரண்டு அரைமணிக்கொருக்க பலாலி விமான நிலையத்தில் வந்திறங்கித் திரும்பின. அத்துடன் பதுங்கியிருந்த சிப்பாய்களும் திரும்பிச் சென்றனர். ஹெலிக்கொப்டர் தாக்குதலும் நிறுத்தப்பட்டது

## வாழ்க்கை செலவு 595 3

கொழும்பு, ஏப்.4 மார்ச் மாதத்துக்கான வாழ்க்கைச் செலவுப் புள்ளி 595.3 ஆக உயர்ந்தது.

பெப்ரவரி மாதத்துக்கான வாழ்க்கைச் செலவுப் புள்ளி 591 6 ஆக இருந்தது.

# புலிகள் சுடுகின்றன என பயணிகள் கத்தினார்கள்

## பதவியா பஸ் தாக்குதல்

### சம்பவ விசாரணையில் தகவல்

கொழும்பு, ஏப் 4 சில வெடிகள் வெடிப்பது போன்ற சத்தங்கள் கேட்டன. அப்பொழுது பயணிகள் "புலிகள் சுடுகின்றன" என்று கத்தினார்கள்.

பதவியாவில் இ. போ. ச. பஸ் ஒன்று மீது மார்ச் 25 ஆம் திகதி நடத்தப்பட்ட தாக்குதலில் மரணமான பி. டி. குணசேன என்ற விவசாயியின் மரணவிசாரணை கொழும்பில் நடந்தது.

அந்த பஸ்ஸின் சாரதி டபிள்யு. டி. சந்தலால் சாட்சியமளிக்கையில் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் கூறியதாவது:– பதவியாவில் பராக்கிரம புரவுக்கும் கஜபா புரவுக்கும் இடையில் 15 ஆவது மதகைத் தாண்டி பஸ் சென்று கொண்டிருந்தது

அச்சமயம் சில வெடிகள் வெடிப்பது போன்ற சத்தங்கள் கேட்டன. அதைப் பற்றி நான் கவனிக்கவில்லை.

அப்போது பயணிகள் "புலிகள் சுடுகின்றன" என்று கத்தினார்கள். என்ன நடந்தது என்று திரும்பிப்பார்த்தேன். ஒரு பயணியையாவது ஆசனத்தில் நான் காணவில்லை.

எல்லாப் பயணிகளும் ஆசனங்களுக்குக் கீழ் பதுங்கியிருந்தனர்.

நானும் ஆசனத்துக்குக் கீழ் பதுங்கிக் கொண்டேன்

பஸ் வேகம் குறையவே நான் கைகளினால் அக்ஸிலரேற்றரை அமர்த்தி வேகத்தைக் கூட்டினேன்.

இப்படி அரை மைல் தூரம் பஸ்ஸைச் செலுத்தினேன்.

மொனரவேவா என்ற இடத்துக்கு வந்ததும் பஸ்ஸை நிறுத்தி விஷயத்தை ஆயுதப்படையினருக்கு அறிவிக்கும்படி பயணிகளிடம் கூறினேன்.

இச்சம்பவத்தில் இறந்தவரும் கண்டக்டரும் காயம் அடைந்தனர்.

இப்படி சாரதி சாட்சியம் அளித்தார்.

கொலைச் சம்பவம் என்று மேலதிக மரண விசாரணை அதிகாரி எட்வர்ட் அஹங்கம தீர்ப்பளித்தார்.

காஸ் சிலிண்டர் விபத்து

## வயிறு கிழிந்து குடல் வெளியே வீசப்பட்டது

### கை 75 அடிக்கு அப்பால்

கொழும்பு, ஏப்ரல் 4 சப்புகஸ்கந்த காஸ் தொழிற்சாலையில் கடந்த வாரம் காஸ் சிலிண்டர் வெடித்ததினால் இறந்தவரின் வயிறு பிய்ந்து குடல் வெளியே வீசப்பட்டது. அவரின் வலது கை 75 அடிக்கு அப்பால் கண்டெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் இருந்து அனுப்பப்பட்ட காஸ் சிலிண்டர் ஒன்றை நிரப்புகையிலேயே இந்தச் சம்பவம் நடந்தது.

இதனால் சப்புகஸ்கந்த காஸ் தொழிற்சாலையிப் 15 லட்சம் ரூபா நஷ்டம் ஏற்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இச் சம்பவத்துக்கு தமிழீழ செம்படை இயக்கம் உரிமை கோரியிருந்தது தெரிந்ததே.

காஸ் சிலிண்டர் வெடித்ததை அடுத்த அத் தொழிற்சாலையின் காஸ் நிரப்பும் பகுதி ஒரே இரத்த மயமாக இருந்தது. இரத்தக்கறைகளை மறைக்க தொழிற்சாலை நிர்வாகம் அப் பகுதிக்குப் புதிதாக பெயின்ட்' அடித்தது.

காஸ் சிலிண்டர்களில் வெடிமருந்துகள் வைக்கப்படுவதைக் கண்டுபிடிக்கும் அதிநவீன சாதனங்களை வெளிநாட்டில் இருந்து தருவிக்க தொழிற்சாலை நிர்வாகம் டெலெக்ஸ் அனுப்பியுள்ளது.

3,200 காஸ் சிலிண்டர்கள் இத் தொழிற்சாலையில் தினமும் நிரப்பப்பட்டு வந்தன. இச் சம்பவத்தின் பின்னர் அரைவாசித் தொகை சிலிண்டர்களும் நிரப்பப்படுவது இல்லை.

## ராஜீவ் . . .

(1–பக்கத் தொடர்ச்சி)

தரமாக அமுலாக்க அனைத்துலகப் படைகள் திரண்டு வந்தாலும் நடக்காது. சந்தேகமிருந்தால் சரித்திரப் புத்தகத்தைப் புரட்டிப் பாருங்கள்.

2. தமிழ் மக்கள் இலங்கைப் பிரச்சினையில் மிதமாக இருக்கிறார்கள் என்பது உங்கள் எண்ணம். அதுவும் சரியல்ல. இலங்கை இரண்டாகப் பிளக்கப்படுவது பற்றியும் விடுதலைப் புலிகளின் வன்முறைச் செயல்கள் பற்றியும் இந்தியா இலங்கைக்குப் படைகளை அனுப்ப வேண்டிய கட்டாயம் பற்றியும் ஒருமித்த கருத்து உருவாகவில்லை என்பது உண்மையே.

ஆனால் உங்கள் அரசின் நடவடிக்கைகள் குறித்து இங்கு துளியும் கருத்து வேற்றுமை கிடையாது. உலகத்திலேயே மிகப் பெரிய அக்கிரமக்காரர் யார்? என்று இங்கு ஒரு வாக்கெடுப்பு நடத்தப்பட்டால், உங்கள் பெயர் தான் முதலில் வரும் என்பது பற்றிச் சந்தேகமே இல்லை.

3. ராஜீவ் காந்தி மெத்தனமாக இருப்பதாக நம்பிக்கொண்டிருக்கிறீர்கள். சீக்கிய பயங்கரவாதிகளையும், ஈழத்து விடுதலைப் புலிகளையும் ஒரு தட்டில் வைத்துப் பார்த்து, அவர் உங்கள் விஷயத்தில் அவ்வளவாக அலட்டிக் கொள்ளமாட்டார் என்று எண்ணிக் கொண்டிருக்கிறீர்கள். அதுவும் தவறானது.

ஏனெனில் காலிஸ்தான் விஷயத்தில் இந்திய அரசு நடந்து கொள்ளும் விதத்துக்கும் ... விஷயத்தில் இலங்கை அரசு இயங்கும் முறைக்கும் உள்ள வித்தியாசங்களை ராஜீவ் காந்தி நன்கு அறிவார்.

இந்திய அரசு, சீக்கியர்கள்மீது குண்டு வீசுகிறதா? வரிசையாக நிறுத்தி வைத்துத் துப்பாக்கியால் சுடுகிறதா? மாறாக, சீக்கியர்களிடமே ஆட்சியைக் கொடுத்து ஜனநாயகத்தை நிலை நாட்டியிருக்கிறது.

பல்வேறு நெருக்கடி காரணமாக அவரால் இதுவரை உங்கள் விஷயத்தில் கடுமைகாட்டச் சந்தர்ப்பப் படாமல் இருந்திருந்தாலும், தமிழக பஞ்சாயத்துத் தேர்தல்களில் தி. மு. க. பெற்ற வெற்றி நிலைமைக்கு ஒரு புதுச் சுறுசுறுப்புத் தந்திருக்கிறது என்பதை மறுக்க முடியாது.

ஜெயவர்த்தன அவர்களே! உங்கள் போக்கை மறுபரிசீலனை செய்வது நல்லது.

## முருங்கனில் கண்ணி வெடிகள் மீட்பு

யாழ்ப்பாணம், ஏப் 4 புதன்கிழமை காலை முருங்கன் பகுதியில் தேடுதல் மேற்கொண்ட சிப்பாய்கள் மூன்று கண்ணி வெடிகளை அகற்றினர்.

முருங்கன் தபால் நிலையத்துக்குச் சமீபமாகவே இக் கண்ணி வெடிகள் கண்டு பிடிக்கப் பட்டன என்று கூறப்படுகிறது.

இச் சம்பவத்தை ... விசாரணைக்கு அழைத்துச் ... வர்களில் தபால் நிலைய ஊழியர்களும் அடங்குவர்.

## வடபகுதித் தமிழர் இருவரும் விடுதலை

கொழும்பு, ஏப் 4 கள்ளப் பாஸ்போட் வைத்திருந்தார்கள் என்ற சந்தேகத்தில் கைதான இரண்டு வடபகுதித் தமிழர்களைக் கொழும்பு கோட்டையில் நீதிவான் திரு. வி. இ. செல்வராஜா விடுதலை செய்தார்.

அவர்கள் மீதான வழக்கைத் தொடர்ந்து நடத்த விரும்பவில்லை என்று பொலிஸார் கூறியதைத் தொடர்ந்தே நீதிவான் விடுதலை செய்யும்படி உத்தரவிட்டார்.

எஸ். பத்மசீலன், கே மனோகரன் ஆகியோரே விடுதலை செய்யப்பட்டவர்கள்.

பெப்ரவரி 5 ஆம் திகதி இருவரையும் பொலிஸார் கொழும்பில் உள்ள மக்கள் வங்கித் தலைமைக் காரியாலயத்தில் பயணிகள் காசோலையை மாற்றச் சென்ற சமயம் கைது செய்தனர்.

## தபால் பொதிகள் பஸ் மூலம்

நல்லூர், ஏப் 4

கடந்த இரண்டு தினங்களாக யாழ் தபால் கந்தோரில் தேங்கிக் கிடந்த தபால் பொதிகள் நேற்று பஸ் மூலம் அனுப்பி வைக்கப்பட்டன.

நேற்று முன் தினம் கொழும்பு செல்லவிருந்த அனைத்து தபால் பொதிகளும் கொக்காவில் கண்ணி வெடிச் சம்பவம் காரணமாக யாழ்ப்பாணம் திரும்பி வந்தன.

இவை அனைத்தையும் சேர்த்து 133 தபால் பொதிகள், நேற்று பஸ் மூலம் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

அச்சிடுவோரும் வெளியிடுவோரும்: நியூ உதயன் பப்ளிகேஷன் லிமிட்டெட், 207, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். அச்சகம்: 15,2 ஆம் ஒழுங்கை மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்
வெளியிட்ட திகதி 04-04-1986
Registered as a Newspaper at the General Post Office. Sri Lanka under number QJ60 N 86

# விளையாட்டரங்கு

யாழ். லீக்கின் அனுசரணையுடன்

## 7 பேர் அணிகள் மோதும் நொக்கவுட் உதைபந்தாட்டம்

### உரும்பராயில் இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஏப். 4 உரும்பராய் மின்னல் விளையாட்டுக்கழகம் யாழ்ப்பாணம் உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் நடத்தும் ஏழு பேர் கொண்ட உதைபந்தாட்ட 'நொக்கவுட்' போட்டிகள் இன்று ஆரம்பமாகின்றன.

இன்று மாலை 4.30 மணிக்கு ஆரம்பமாகும் முதலாவது ஆட்டத்தில் முஸ்லிம் மரூன் அணியை எதிர்த்து உரும்பராய் அண்ணா விளையாட்டுக் கழக அணி மோதும்—

இந்தப் போட்டியில் பல்வேறு கழகங்களைச் சேர்ந்த 18 அணிகள் பங்கு பற்றுகின்றன.

ஆட்டங்கள் அனைத்தும் உரும்பராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

பங்குபற்றும் அணிகள் அனைத்தும் மூன்று குழுக்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. அவற்றின் விவரம் வருமாறு:–

பிரிவு ஏ:– யாழ். முஸ்லிம் மரூன், அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழக 'ஏ' அணி, பாஷையூர் சென். அன்ரனீஸ், உரும்பராய் அண்ணா வி க, யாழ்ப்பாணம் சென். நிக்கலஸ், தெல்லிப்பழை கிறுஸ்கொப்பர்ஸ்.

பிரிவு 'பி':– கிறுஸ்கொப்பர்ஸ் 'ஏ', யாழ்ப்பாணம் பாடும்மீன் 'பி', நாவாந்துறை சென். மேரிஸ் 'ஏ', உரும்பராய் திருக்குமரன் அணி, வதிரி டயமண்ட்ஸ் அணி, அரியாலை ஐ. வி. க. 'பி' அணி.

பிரிவு 'ஸி':– முஸ்லிம் கோல்ட்ஸ், வயாவிளான் மின்மீன் வி- க, பாடும்மீன் அணி, உடுவில் ஐக்கிய விளையாட்டுக்கழகம், ஊரெழு றோயல் வி. க, சென்மேரிஸ் அணி.

இந்தப் போட்டியில் வெற்றி பெறும் அணிக்கு தங்கப்பதக்கம் ஒன்று பரிசாக வழங்கப்படும். இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெறும் அணிகளுக்கு முறையே ஆயிரம் ரூபா, ஐந்நூறு ரூபா பரிசில்களும் வழங்கப்படவிருக்கிறது.

நாளை 5 ஆம் திகதி நடைபெறும் ஆட்டத்தில் தெல்லிப்பளை கிறுஸ்கொப்பர்ஸ் 'ஏ' அணியை எதிர்த்து உரும்பராய் திருக்குமரன் விளையாட்டுக் கழக அணி மோதும்

## உரும்பராயில் மென்பந்து கிரிக்கெட்

யாழ்ப்பாணம், ஏப். 4 உரும்பராய் விளையாட்டுக் கழகம் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டி ஒன்றை நடத்த உள்ளது.

இந்த சுற்றுப் போட்டி 11 பேரைக் கொண்ட மட்டுப்படுத்தப்பட்ட 20 ஓவர் போட்டி ஆகும்.

பங்குபற்ற விரும்பும் கழகங்கள் தங்களது விண்ணப்பங்களைக் கீழ்வரும் முகவரிக்கு 12 04-86க்கு முன்னதாக அனுப்பி வைக்கும்படி கோரப்பட்டுள்ளன.

எஸ். சிவதாசன், தலைவர், உரும்பராய் விளையாட்டுக் கழகம், உருபராய்.

# கொக்காவில் கண்ணிவெடியில் 25 சிப்பாய்களும் 4 போராளிகளும் பலி

## விடுதலைப் புலிகள் அறிக்கை

சென்னை, ஏப். 3 கொக்காவிலுக்கு அருகில் பதினெட்டாம்போர் என்னும் இடத்தில் நடந்த நிலக்கண்ணி வெடித்தாக்குதலில் 25 சிப்பாய்கள் கொல்லப்பட்டனர். நேரடி மோதலில் 4 போராளிகள் களப்பலி அடைந்தனர்.

இப்படி தமிழீழ விடுதலைப் புலிகள், சென்னையில் விடுத்த அறிக்கையில் கூறியிருக்கின்றனர்.

'கிளிநொச்சி மண்ணில் ஒரு திருப்புமுனை — என்ற தலைப்பில் விடுக்கப்பட்ட அந்த அறிக்கை வருமாறு:-

புதன்கிழமை காலை 7·30 மணியளவில் மாங்குளத்தில் இருந்து ஏழு மைல்களுக்கு அப்பாலும் கொக்காவிலுக்கு 3 மைல்களுக்கு முன்னாலும் உள்ள பதினெட்டாம் போர் என்னும் இடத்தில் 34 வாகனங்களிலும் நடந்தும் சிப்பாய்கள் வந்து கொண்டிருந்தனர்.

அவர்கள் மீது எமது போராளிகள் பலமான நேரடி மோதல் ஒன்றை நடத்தினர். முன்னதாக வந்த லொறி ஒன்று கண்ணிவெடியால் சிதறியது

பீரங்கி பொருத்தப்பட்ட சலாடின் கவச வாகனம் ஒன்றும் லொறி ஒன்றும் ஆர்.பி ஜி தாக்குதலில் முற்றாகச் சேதமடைந்தன.

இத்தாக்குதலில் ஒரு லெப்டினன்ட் உட்பட 25 சிப்பாய்கள் பலியானார்கள். இன்னொரு லெப்டினன்ட் படுகாயமடைந்தார்.

பல நவீன ரக தன்னியக்கத் துப்பாக்கிகள், ரவைக்கூடுகள், தோட்டாக்கள் ஆகியன எம்மால் கைப்பற்றப்பட்டன.

மூன்றுமணி நேரம் பலமாக நடந்த அம்மோதலில் வதனன், பெஞ்சமின், ஜோன், மோகன் ஆகிய நான்கு போராளிகள் களப்பலியானார்கள்.

அவர்களுக்கு எமது வீர வணக்கம்.

இப்படி தமிழீழ விடுதலைப் புலிகள் அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

# அதிகாரப் பரவலை நீதியான முறையில் செய்ய அரசு தயார்.

## அரச அதிபர்கள் மாநாட்டில் காமினி

கொழும்பு, ஏப் 4 அதிகாரங்களை நீதியான முறையில் அதிகாரப் பரவல் செய்வதற்கு அரசு தயாராக உள்ளது.

இவ்வாறு காணி, மகாவலி, மகாவலி அபிவிருத்தி அமைச்சர் திரு. காமினி திஸநாயக்கா அரசாங்க அதிபர்கள் மாநாட்டில் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

அரசாங்க அதிபர்கள் மாநாடு கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று ஆரம்பமானது.

உள்நாட்டமைச்சர் திரு. கே. டபிள்யு, தேவநாயகம் மாநாட்டுக்குத் தலைமை வகித்தார்.

காணி, காணி அபிவிருத்தி, மகாவலி அமைச்சர் திரு. காமினி திஸநாயக்கா பேசுகையில் சொன்னதாவது,

காணி, காணி அபிவிருத்தி, குடியேற்றம், சட்டம், ஒழுங்கு, பராமரிப்பு சம்பந்தமான அதிகாரங்களைப் பரவலாக்கி நீதியான தீர்வுகாண அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

தீவிரவாதத்தினால் நாடு அச்சுறுத்தப்பட்டுள்ளது. இந்த வருட முடிவுக்குள் தீவிரவாதம் ஒழிக்கப்பட்டு விடும்.

அதிகாரப் பரவலாக்கல் திட்டத்தை அமுல் நடத்த அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

தீவிரவாதிகள் அரச நிர்வாகத்துக்கு பெரும் சவாலாக இருக்கின்றனர்

எனது அமைச்சின் அதிகாரங்களை நான் பிராந்திய ரீதியில் பரவலாக்கத் தயாராக உள்ளேன். பிராந்தியங்களில் இராணுவப் பாதுகாப்புப் படை வைத்திருக்க நாம் அனுமதிக்க மிடியாது.

இந்தியாவிலும் இதற்கு மாநில ரீதியில் அனுமதி வழங்கப்படவில்லை.

அதிகாரங்களை நீதியான முறையில் பரவலாக்கம் செய்ய அரசு தயாராக உள்ளது.

நீரில் இருந்து மீனை அகற்றுவது போல மக்களிடம் இருந்து தீவிரவாதிகளைப் பிரித்தெடுக்க வேண்டும். அப்படிச் செய்துவிட்டால் வடக்கு கிழக்கு மாகாணங்களில் சமாதானம் நிலவும்.

ஏனைய பகுதி அரச அதிபர்கள் போன்று வடக்கு கிழக்கு அரச அதிபர்கள் இயங்க முடியாது உள்ளது. விரைவில் வடக்கு, கிழக்கு அரச அதிபர்களும் நிம்மதியாக செயல்படும் நிலைமை உருவாகும் – இப்படி அமைச்சர் காமினி திஸநாயக்கா சொன்னார்.

## கொக்காவிலில் இருவர் கொல்லப்பட்டனர்

யாழ்ப்பாணம், ஏப்.4 கொக்காவில் கடந்த புதன்கிழமை நடந்த கண்ணிவெடி சம்பவத்தின்போது இரண்டு பொதுமக்களும் கொல்லப்பட்டனர்.

உடன் தேவை

C 90, C 70 வகையைச் சார்ந்த மோட்டார் சைக்கிள்கள் உடன் தேவை. விலை விபரங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள்.
செ.செல்வராசா(நாதல்)
"சிவபதி" நந்தாவில்
கொக்குவில் கிழக்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org